# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.42 (L.W.72)

| | | | |
|---|---|---|---|
| Name | Nehru | Caste | Thuluva Vellala |
| Father's Name | K.A.Subramaniam | Calling | (Retd) |
| Village | Sve ( Vellore) | Religion | Hindu |
| Taluk | Vellore | Age | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.02.2025.

(A3 absent. His absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A1, A2, A4 to A6 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 03.00 P.M.**

நான் இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை சென்னையில் முதுநிலை மருத்துவ பதிவேடு அலுவலராக பணியாற்றி கடந்த 31.07.2023-ல் பணி ஓய்வு பெற்றேன். நான் மருத்துவர் அல்ல. ஆவணங்களை பாதுகாப்பதற்கான அதிகாரி. கடந்த 26.06.2015 அன்று ஷமீல் பாஷா என்ற நோயாளி எங்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அன்று மாலை 05.45 மணியளவில் உயிரிழந்தார்.

அவர் சம்பந்தப்பட்ட மருத்துவ அவணங்கள் மருத்துவ இறப்பு பதிவேடு துறையில் பாதுகாக்கப்பட்டது. 12.02.2016-ல் சிபிசிஐடியிலிருந்து பெறப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட இறப்பு பதிவேடு நகல்

சான்றொப்பமிடப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் மருத்துவ பதிவேடு ஆவணங்களை நான்தான் True Copy/Attested என்று சான்றளித்து வழங்கினேன். அந்த ஆவணங்கள் அ.த.சா.ஆ.53, 54, 55, 56, 57 ஆகும்.

மேலும் சில ஆவணங்கள் அரசு தரப்பில் அரசு தரப்பில் பட்டியல் ஆவணம் 53 ஆக கொடுக்கப்பட்ட 10 தாள்கள் அடங்கிய கோப்பு என்னால் கையொப்பமிட்டு கொடுக்கப்பட்டது. அந்த கோப்பு அ.த.சா.ஆ.65. அது ஒளிநகல் ஆவணம் என்பதால் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியிடப்படுகிறது. அதுகுறித்து இறுதி விசாரணையில் வாதுரைக்கலாம். வேலூர் சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

Medico Legal வழக்குகளில் நோயாளிகள் மருத்துவமனைக்கு வரும்போது அந்த நோயாளியோடு வரும் ஆவணங்களில் எம்எல்சி என்று குறிப்பிடவேண்டும். அதேபோல் எங்கள் மருத்துவமனையிலும் அந்த நோயாளிக்கு எம்எல்சி என்று குறிப்பிட வேண்டும் என்றால் சரிதான்.

வேறு மருத்துவமனையிலிருந்து எங்கள் மருத்துவமனைக்கு வந்த நோயாளி பின்னர் இறந்தபின்பு referral செய்த ஆவணங்களும் சேர்ந்து எங்கள் மருத்துவமனை சிகிச்சைக்கூடத்து ஆவணம் சேர்ந்துதான் எங்களுடைய ஆவண பாதுகாப்புக்கு வரும் என்றால் சரிதான்.

என்னால் குறியிடப்பட்ட ஆவணங்களில் வேறு ஏதாவது மருத்துவமனையின் referral செய்த ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. அ.த.சா.ஆ.65 கோப்புகள் வேலூர் மருத்துவமனையில் இருந்து நோயாளியுடன் அனுப்பப்பட்ட ஆவணங்களின் நகல்கள் ஆகும். ஆம்பூர் மருத்துவமனையிலிருந்து referral செய்த மருத்துவ ஆவணங்கள் அதில் எதுவும் இல்லை.

ஆம்பூரிலிருந்து வேலூர் மருத்துவமனைக்கு நோயாளியை அனுப்பும்போது ஆம்பூர் மருத்துவமனையில் referral ஆவணங்கள் எங்கு இருக்கும் என்றால் வேலூர் மருத்துவமனையில் இருக்கும். ஆம்பூர் மருத்துவமனையில் இருந்து வேலூருக்கு அனுப்பிய referral ஆவணங்களுடன் வேலூரிலிருந்து சென்னைக்கு அனுப்பும்போது அனைத்து referral ஆவணங்களையும் சென்னைக்கு அனுப்பி வைத்திருக்க வேண்டும் என்றால் சரிதான்.

ஆம்பூரிலிருந்து நோயாளியை வேலூருக்கு அனுப்பிய பின்னர் வேலூரில் அந்த நோயாளிக்கு உள் சிகிச்சை அளித்திருந்தால் ஆம்பூரிலிருந்து அனுப்பப்பட்ட referral ஆவணங்கள் வேலூர் மருத்துவமனையில் இருக்கும். மேலும் அந்த நோயாளியை மேல் சிகிச்சைக்காக சென்னைக்கு அனுப்பும்போது வேலூரில் கொடுக்கப்பட்ட மருத்துவ குறிப்பு ஆவணங்களை சென்னைக்கு அனுப்புவார்கள்.

அசல் ஆவணங்களை அந்தந்த மருத்துவமனையில் வைத்துக்கொண்டு அந்த மருத்துவ ஆவணங்களில் உள்ள மருத்துவ குறிப்புகளை மட்டும் referral ஆர்டரில் எழுதி அனுப்புவார்கள்.

எம்எல்சி கேஸாக இருக்கும் பட்சத்தில் ஏஆர் காபியின் நகலை அந்த referral ஆர்டருடன் இணைத்து அனுப்புவார்கள். அந்த referral உத்தரவு எந்த மருத்துவமனைக்கு நோயாளி அனுப்பப்பட்டாரோ அந்த மருத்துவமனையில் நோயாளியின் மருத்துவ ஆவணங்களுடன் இருக்கும். வேலூர் மருத்துவமனையிலிருந்து அனுப்பப்பட்ட referral கடிதத்தின் அசல் எங்களிடம் இருக்கும் என்றால் சரிதான்.

True copy/Attested என்று நான் சான்றளித்த ஆவணங்களின் அசல் ஆவணங்களை பார்த்துதான் நான் கையொப்பமிட்டேன். அ.த.சா.ஆ.65–ல் 10 வது தாளில் என்னுடைய பச்சை மை கையொப்பம் இல்லை. அந்த 10 வது தாள் ஒளிநகல் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அ.த.சா.ஆ.65 இரண்டாவது தாளில் எந்தவொரு மருத்துவரின் கையொப்பமும் இல்லை. அந்த தாளில் எந்த நோயாளியின் பெயர் உள்ளது என்றால் Shameed Basha என்று உள்ளது. அ.த.சா.ஆ.53–ல் Cause of death என்ற ஆவணத்தில் உள்ள நோயாளியின் பெயர் Shameed Basha என்று உள்ளது. அதே ஆவணத்தில் பக்க எண் 3/7–ல் தொடக்க நிலை நோய் ஆவணத்தில் Shameed Basha என்று உள்ளது.

ஆதே ஆவணத்தில் பக்க எண் 4/7–ல் Opinion form–ல் Shameed Basha என்றுதான் உள்ளது. அதே ஆவணத்தில் பக்க எண் 6/7 மற்றும் 7/7–ல் நோயாளியின் பெயர் என்ற இடத்தில் எந்த ஒரு பெயரும் குறிப்பிடவில்லை. அ.த.சா.ஆ.57–ல் நோயாளியின் பெயர் எதுவுமில்லை. நோயாளியின் இறப்புக்கு பின்னர் அவருடைய மருத்துவ ஆவணங்களின் அசல்களை பராமரிக்கின்ற அதிகாரி யார் என்றால் முதுநிலை மருத்தவ பதிவேடு அலுவலர்.

2016 ல் நான்தான் முதுநிலை மருத்துவ பதிவேடு அலுவலர் ஆவேன். அந்த மருத்துவ ஆவணங்கள் எவ்வளவு காலம் பாதுகாக்க வேண்டும் என்றால் Non Medico Legal Case ஆக இருக்கும் பட்சத்தில் 3 ஆண்டுகளும் Medico Legal Case ஆக இருக்கும் பட்சத்தில் 6 ஆண்டுகள் வரையிலும் பாதுகாக்கப்படும்.

இந்திய மத்திய அரசாங்கத்தால் Medico Legal Case–ல் மருத்துவ ஆவணங்களை பராமரிப்பது சம்பந்தமாக சொல்லப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் பற்றி தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. Tamil Nadu Clinical Establishments (Regulation) Rules உள்ளது பற்றி எனக்கு தெரியாது. அது அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டு 2018 வந்தது என்றால் அது பற்றி தெரியாது.

Tamil Nadu Clinical Establishments (Regulation) Rules ல் Rule 14 ல் அனைத்து மருத்துவ ஆவணங்களையும் எந்த ஒரு மருத்துவமனையும் குறைந்தபட்சம் பத்து ஆண்டுகள் மேல் பராமரிக்க வேண்டும் என்று உள்ளது. அந்த விதியில் Medico Legal சம்பந்தப்பட்ட ஆவணங்கள் Chief Medical Officer ன் கீழ் Lack and key method–ல் வைத்திருக்க வேண்டும் என்றால் அதில் அவ்வாறு உள்ளதுதான். அதைப்பற்றிய knowledge எனக்கு இல்லை.

சிபிசிஐடி போலீசார் எங்களுக்கு கொடுத்த வேண்டுகோள் கடிதம் தற்போது என்வசம் இல்லை. நீதிமன்றத்திலும் அதை நான் தாக்கல் செய்யவில்லை. அது எங்களுடைய மருத்துவ ஆவண அலுவலகத்தில் இருக்கும். அந்த கடிதத்தில் அசல் ஆவணங்களை கேட்டார்களா அல்லது சான்றிட்ட ஆவணங்களை கேட்டார்களா என்றால் சம்பந்தப்பட்ட ஆவணங்களை கேட்டார்கள்.

உண்மை நகலை கேட்டார்கள். போலீசார் கேட்ட ஆவணங்களை கொடுக்க எனக்கு யார் உத்தரவிட்டார்கள் என்றால் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரும் பட்சத்தில் ஆசல் ஆவணங்களை நீதிமன்றத்தில் தருவோம். போலீசார் வழக்கு தொடர்பாக மருத்துவ ஆவணங்களை கேட்கும் பட்சத்தில் உண்மை நகல் சான்றளிக்கப்பட்டது என்று போட்டு கொடுப்போம்.

கல்லூரி முதல்வருக்கு வரும் கடிதங்களை மருத்துவ ஆவணம் தொடர்பாக இருக்கும் பட்சத்தில் அதை எங்களுக்கு பார்வேர்டு செய்வார் அது போலீஸாக இருக்கும் பட்சத்தில் நாங்கள் உண்மை நகல் என்று சான்றிட்டு அனுப்புவோம். 2016 ல் சிபிசிஐடி போலீசார் நோயாளியின் மருத்துவ ஆவணங்களை நகல்களை கேட்ட நிலையில் அதை கொடுத்த பின்னர் அசல் அவணங்களை குற்ற வழக்கிற்காக பாதுகாக்க வேண்டும் என்ற நடைமுறை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

இந்த வழக்கில் என்னை விசாரிக்க இந்த நீதிமன்றத்திலிருந்து தற்போது அழைப்பாணை கிடைக்கப்பெற்றது. எனவே மருத்துவ அசல் ஆவணங்களை கொண்டு வந்தேனா என்றால் கொண்டுவரவில்லை. Medico Legal Case சம்பந்தப்பட்ட ஆவணங்களை எங்கள் பதிவகத்திற்கு அனுப்பும்பட்சத்தில் அதற்கு தனியாக ஒரு பதிவேட்டை பராமரிப்போம். அந்த பதிவேட்டில் என்னென்ன ஆவணங்கள் வந்தது என்பதற்கான எண்ணிக்கையை பதிவோம்.

Medical officer ஆவணங்களை எங்களது ஆவண காப்பகத்திற்கு அனுப்பும்போது Cencex Sheet மூலம் அனைத்து மருத்துவ ஆவணங்களையும் அதில் எழுதி அனுப்புவார்கள்.

போலீசார் என்னை விசாரித்தபோது கைப்பட எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையொப்பம் போடவில்லை. நான் வழங்கிய ஆவணங்களை என்னனை விசாரித்த அதிகாரியிடம் நேரடியாக கொடுத்தேன். என்னுடைய போலீசார் வாக்குமூலத்தில் அனுப்பிவைத்தேன் என்று உள்ளது.

அசல் ஆவணங்களை பாதுகாத்து வைத்து நீதிமன்றத்தில் கொடுக்க வேண்டிய நான் அதை அழித்துவிட்டேன் என்று போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.65 ல் Shameed Basha என்பவரின் ஆவணத்தைதான் குறீயீடு செய்துள்ளேன் என்றாலும், இந்த வழக்கில் இறந்து போன Shameel Basha ஆவணங்களை நான் குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான்.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

என்னுடைய கல்வித்தகுதி Bachelor of Medical record science ஆகும். மருத்துவ ஆவணங்களை பராமரிப்பதற்கான விதிமுறைகள் உள்ளது பற்றி எனக்கு தெரியும். உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டவரின் அனைத்து விவரங்களையும் நாங்கள் பராமரிக்க வேண்டும்.

மருத்துவ கல்லூரியின் உதவி பேராசிரியர்கள் மற்றும் இணைப்பேராசிரியர்கள் நோயாளிகளை பரிசோதனை செய்து எழுதும் மருத்துவ குறிப்புகளை அங்கு நோயாளிக்கு இருக்கும் Case sheet லேயே குறிப்பார்கள்.

நோயாளி விடுவிக்கப்பட்ட பின்னோ அல்லது இறந்த பின்னோ அந்த Case sheet எங்களது ஆவண காப்பகத்திற்கு வரும். அந்த Case sheet Nursing Superintendent Officer– க்கு மொத்த எண்ணிக்கையிலான மருத்துவ பதிவேடுகளை சரிபார்த்து அங்கிருந்து அவர் வழியாக கையொப்பமிட்டு சென்ஸஸ் படிவத்தில் பூர்த்தி செய்து அடுத்த நாள் காலை 10.00 மணிக்கு மருத்துவ பதிவேட்டு துறைக்கு வந்து சேரும்.

நான் நிர்வாக பணி பார்க்கிறேன். மருத்துவ பணி பார்ப்பதில்லை. எங்களுக்கு நிர்வாக பணி நடைமுறை பொறுந்தும். மருத்துவ பணி நடைமுறை பொறுந்தாது. Referral matter and opinion of the patient all the case details are in the Case sheet. That case sheet is coming via through RMO. Diagnosis testing related details அனைத்தும் மருத்துவ பதிவேட்டு ஆவணத்தில் பாதுகாக்கப்படும்.

Medico Legal Case ஆவணங்கள் confidential ஆகும். Date of Admission in Vellore is 22.06.2015. உள்நோயாளி எண் 31471. வேலூர் மருத்துவமனையிலிருந்து அனுப்பப்பட்ட referred patient எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பின்னர் இறந்துள்ளார்.

வேலூர் மருத்துவமனையை தவிற மற்ற மருத்துவமனை பற்றி referral sheet–ல் இல்லை. நோயாளி மருத்துவமனையை விட்டு தன்னிச்சையாக வெளியே சென்றால் மருத்துவமனைக்கு வெளியே உள்ள காவல் நிலையத்திற்கு ஒரு இன்டிமேசன் ஸ்லிப் மூலம்

தகவல்களை பதிந்து அந்த காவல் நிலையத்திற்கு அனுப்பிவைப்போம். அப்படி நாங்கள் செய்யவில்லை என்றால் அது மருத்துவ கவனக்குறைவு என்றால் தெரியாது. எங்கள் மருத்துவமனைக்கு referral மூலம் உள்நோயாளியாக வரும் நோயாளிக்கு ஏஆர் என்ட்ரி நாங்கள் போட மாட்டோம்.

நோயாளி முதலில் எந்த மருத்துவமனையில் சேர்ந்தாரோ அந்த மருத்துவர் ஏஆர் போடுவார்கள். அதன் நகல் எங்கள் மருத்துவமனைக்கு வரும். எம்எல்சி வழக்கில் முதலில் சேர்க்கும் மருத்தவமனையில் ஏஆர் போடுவார்கள். எங்களுக்கு வரும் Case sheet–ல் நோயாளியின் பெயர் இல்லாதபட்சத்தில் அதை நான் திருத்தி நோயாளியின் பெயரை எழுதி வாங்க வேண்டும் என்றாலும் அவ்வாறு நோயாளியின் பெயர் இல்லை என்றால் அந்த Case sheet செல்லத்தக்கது இல்லை என்றால் சரியல்ல.

அனைத்து மருததவ ஆவணங்களையும் சரிபார்த்து வாங்க வேண்டியது என்னுடைய கடமை என்றால் சரிதான். சிடிஸ்கேன், எக்ஸ்ரே, எம்ஆர்ஐ போன்ற பிலிம் அனைத்தும் அந்தந்த துறையல் இருக்கும். அதனுடைய ரிபோர்ட் மருத்துவ ஆவணங்களில் எங்களுக்கு வரும்.

சிபிசிஐடி போலீசார் என்னை 12.02.2016 ல் பார்த்தார். நோயாளியின் ஆவணததை நான்தான் சிபிசிஐடி போலீசாரிடம் கொடுத்தேன். அது குறித்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சிபிசிஐடி போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 04.51 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.24 17:22:14 +0530